ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/9 - 2012 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2012.12.31

*1791/9 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம்*

*வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்*

*வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கிணங்க குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சத்தியம் செய்யாமை அல்லது உறுதியுரையை கையொப்பமிடாமை காரணமாக, வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(1) ஆம் பிரிவின் கீழ் வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்,*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளார் ஆதலாலும்,*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. கொடயலே கெதர சந்திரசேன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்,*

*தேர்தல்கள் ஆணையாளரான வடுகே வருணசிறி மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, திரு. கொடயலே கெதர சந்திரசேன என்பவர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2012, திசெம்பர் 26.*

*01-436*